தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.maveerarnaal.ch / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2020

**7 வயதுப்பிரிவு**
(01.01.2013 – 31.12.2013 வரையில் பிறந்தோர்)

## அறம் வெல்லும்

“அறம் செய விரும்பு” என்றார் ஔவையார். அறம் என்பதே தமிழர் வாழ்வின் அடிப்படை. தங்கள் வாழ்வை அகம், புறம் என்று பிரித்து இரண்டையும் அறத்தின் வழியில் வாழ்ந்து காட்டியவர் எம் முன்னோர்.

அவ்வாறே, எங்கள் தலைவர் மாமாவும் அறத்தின் வழி நின்று விடுதலைப்போரை வழிப்படுத்தினார். அவர் வழிகாட்டலை ஏற்று, போர் அறங்களைப் பேணி, களமாடி, தம் உயிர்களைத் தாய்மண்ணின் விடுதலைக்காய் தந்தவர் எம் மாவீரர்.

அறத்தோடு நிமிர்ந்து நின்ற எமது தமிழீழ அரசைப் பன்னாடுகள் கூட்டுச் சேர்ந்து அழித்தன. அறத்தின் வாழ்வு தன்னைச் சூது கவ்வும், முடிவில் அறமே வெல்லும் என்பது உறுதி.

இழந்த எம் மண்ணை மீட்பதற்கான பயணம் தன் இலக்கை அடையும். தமிழீழம் மலரும். மாவீரர் கனவு நனவாகும். தமிழீழத் தேசியக்கொடி எங்கள் தாயகம் எங்கும் அசைந்தாடும். அறம் வெல்லும்.

நன்றி,

வணக்கம்.